**கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை**
**சுற்றாடல் அமைச்சு**

**அம்பாறை மாவட்ட அலுவலகத்திற்கான கட்டிடத்தை குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல்**

கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் அம்பாறை மாவட்ட அலுவலகத்திற்காக பின்வரும் தேவைப்பாடுகளுடனான குத்தகை அல்லது வாடகை அடிப்படையிலான வீடு அல்லது கட்டிடமொன்று தேவைப்படுகின்றது.

1. கரையோரப் பிரதேசத்தை அண்டியதாக இருத்தல் மற்றும் அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைந்திருத்தல் விரும்பத்தக்கதாகும்.
2. 2000 சதுர அடி வரையிலான இடப்பரப்பு இருத்தல் வேண்டும், பிரதான வீதிக்கு முகப்பாக அல்லது பிரதான வீதியிலிருந்து 50m இற்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும், குறைந்த பட்சம் 2 வாகனங்களையாவது நிறுத்தி வைக்கக்கூடிய வசதி இருத்தல் வேண்டும், மேலும் நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
3. நிலப்பரப்பை சூழ சுற்று மதில் இருத்தல் வேண்டும்.
4. அலுவலக இடவசதிக்கு மேலதிகமாக வெளியிடங்களிலிருந்து வருகைதந்து வேலை செய்யும் உத்தியோகத்தர்களின் தங்குமிட வசதிக்காக இரண்டு அறைகளை கொண்டிருத்தல்.
5. குறைந்தபட்சம் 03 வருட காலத்திற்காவது குத்தகை அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:**

மேலுள்ள 1-5 வரையான விடயங்களுக்கு மேலதிகமாக பின்வரும் ஆவணங்களையும் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

- குறித்த வீட்டை அல்லது கட்டிடத்தை வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு தமக்குள்ள சட்ட உரிமையை நிரூபிக்கும் ஆவணத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி.
- குறித்த உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீடு / கட்டிட வரைபடத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி.
- குறித்த வீட்டிற்கான அல்லது கட்டிடத்திற்கான அரச மதிப்பீட்டு அறிக்கையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி

இதன்பொருட்டு விண்ணப்பிக்க உத்தேசிப்பவர்கள் விலைமனுக்களை உள்ளடக்கிய பிரேரணை விபரங்களை கையெழுத்திட்டு உறுதிப்படுத்தி பதிவுத் தபாலில் **2026 ஆடி மாதம் 3ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கிடைக்கும் வகையில் **'தவிசாளர் - கொள்முதல் குழு, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, இல. 177, நாவல வீதி, நாரஹென்பிட்ட, கொழும்பு-05'** எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது எமது தலைமை அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் அமைந்துள்ள விலைமனுகோரல் பெட்டியில் இடவேண்டும்.

முழுமையற்ற விண்ணப்பங்கள், உரிய திகதிக்குப் பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், தொலைநகல், மின்னஞ்சல் அல்லது சாதாரண தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **'அலுவலக இடவசதி – அம்பாறை மாவட்டம்'** எனக் குறிப்பிடல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை எமது நிர்வாக உத்தியோகத்தரை 011 2554624 எனும் தொலைபேசி இலக்கம் ஊடாக தொடர்புகொணடு பெற்றுக்கொள்ளலாம்.

தவிசாளர்
கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை,
இல. 177, நாவல வீதி,
நாரஹென்பிட்ட,
கொழும்பு-05

18/6/26

**Samantha Gunasekara**
MSc. (Spain), BSc. (SL), FGG. (Ger.), FGA (G.B)
Chairman
Marine Environment Protection Authority
Ministry of Environment